DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 325/2021 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 1 Nalini** |
| Father's Name | வெங்கடேசன் |
| Village | வடபுத்தூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 08/03/2024

**முதல் விசாரணை**

நான் வடபுத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். கூலிவேலை செய்கிறேன். சுமார் 4வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவில் நாங்கள் கழனியில் கட்டியுள்ள வீட்டின் மாடியில் நானும், என் கணவர் வெங்கடேசன், என் மகள் ரம்யா ஆகியோர் படுத்து தூங்கி கொண்டிருந்தோம். அப்போது இரவு 11.30 மணிக்கு நாங்கள் படித்திருந்தோம் வீட்டின் மாடியில் 3 பேர் வந்தார்கள் ஒருவர் வீட்டின் கீழே இருந்தார். மாடிக்கு வந்த 3 நபர்கள் கைகளில் இரும்பு ராடு வைத்திருந்தனர். வீட்டின் மாடியில் லைட்டு எரிந்து கொண்டிருந்தது அதனால் வந்தவர்கள் அந்த வெளிச்சத்தில் நான் பார்த்தேன். என் வீட்டு மாடிக்கு வந்த நபர்களை தற்போது நான் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். ஆஜர் எதிரிகள் தான் எங்கள் வீட்டு மாடிக்கு வந்த நபர்கள் ஆவார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியில் முதலாவதாக நிற்கும் எதிரிதான் என் கணவரை இரும்பு ராடால் முதலில் அடித்தார் அவரின் முகத்தில் வெட்டுகாயம் இருக்கும். ( சாட்சி அடையாளம் காட்டிய எதிரியின் பெயரை நீதிமன்றம் கேட்ட போது அவர் வினோத் என்று சொன்னார்.) மேற்படி எதிரி வினோத் என் கணவரை இரும்பு ராடால் தலையில் சாகட்டும் என்று தலையிலும், கையிலும் உடம்பு முழுவதும் அடித்தார். ஆஜர் எதிரிகளில் 3வதாக நிற்கும் நபர் வீட்டின்

மாடிக்கு வரவில்லை. அவர் பெயரை கேட்டபோது தன்பெயர் தேவராஜ் என்று சொன்னார். ஆஜர் எதிரிகளில் 1,2,4வதாக நிற்கும் எதிரிகள் வீட்டின் மாடிக்கு வந்தார்கள். (அவர்களின் பெயரை நீதிமன்றம் கேட்ட போது முறையே வினோத்குமார், ராமலிங்கம், சத்தியமூர்த்தி என்று சொன்னார்கள்) வீட்டின் மாடிக்கு வந்த மற்ற எதிரிகள் ராமலிங்கம், சத்தியமூர்த்தி ஆகியோர் என் கணவரை 1ம் எதிரி அடிக்கும் போது பிடித்துகொண்டார்கள். அப்போது நான் கத்தினேன் அதனால் மேற்படி 3 எதிரிகளும் கத்தரா பாரு அவளை போடு என்று சொல்லி முதலாவது எதிரி வினோத்குமார் இரும்புராடால் என் மண்டையில் அடித்தார். என் மகளை எதிரிகள் அடிக்கவந்தார்கள் நான் அடிக்காமல் பிடித்துகொண்டேன். எதிரிகள் அடித்ததால் எனக்கும், என் கணவருக்கும் ரத்த காயங்கள் ஏற்பட்டது. நான் கத்தியபோது என் வீடடிற்கு பக்கத்தில் இருந்தவர்கள் வந்தபோது 1வதாக நிற்கும் எதிரி வினோத்குமார் என் தாலியை அறுத்துகொண்டார். நான் அணிந்திருந்த தாலி கால் பவுனும், நாணல் 1 கிராம் அளவிலும் இருந்தது. அதன் மதிப்பு ரூ.20,000 இருக்கும். பின்னர் எதிரிகள் அனைவரும் மாடியிலிருந்து இறங்கி கீழே எதிரியோடு ஓடிவிட்டார்கள். என் சத்தம்கேட்டு வரதகவுண்டர், சம்பத் ஆகியோர் வந்தார்கள் அவர்கள் வந்து என் மருமகன் ஆசைதம்பி என்பவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து அவர் வந்து காயமபட்ட என்னையும், என் கணவரையும் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். பின்னர் மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். நான் செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்தபோது செஞசி போலிசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள் நான் நடந்ததை சொன்னேன் என்னிடம் காண்பிக்கப்படுவது தான் நான் போலிசாரிடம் கொடுத்த புகார் என் மனைவி அணிந்திருந்த தாலி கால் பவுனும், நாணல் 1 கிராம் அளவிலும் இருந்தது. அதன் மதிப்பு ரூ.20,000 இருக்கும்.வாக்குமூலம் ஆகும். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 325/2021 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 2Venkatesan** |
| Father's Name | சாமிநாதன் |
| Village | வடபுத்தூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 08/03/2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் வடபுத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 நளினி என் மனைவி ஆவார். 21.06.2019ம் தேதி நானும், என் மனைவி நளினியும், என் மகள் ரம்யா ஆகியோர் எங்கள் நிலத்தில் கட்டியுள்ள வீட்டின் மாடியில் இரவில் படுத்துகொண்டிருந்தோம். அப்போது இரவு 11.30 மணிக்கு மாடிக்கு யாரோ வருவது போல் சத்தம் கேட்டது நான் பார்த்தபோது 3 பேர் மாடிக்கு வந்தார்கள். அப்போது மொட்டைமாடியில் மின்விளக்கு எரிந்துகொண்டிருந்தது மாடிக்கு வந்தவர்கள் அவர்களை தற்போது நான் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். ஆஜர் எதிரிகளில் முதல் 3 எதிரிகள் தான் மாடிக்கு வந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. அதற்கு முன்பு நான் அவர்களை பார்த்ததில்லை. (சாட்சி அடையாளம் காட்டிய எதிரிகளின் பெயரை கேட்டபோது அவர்கள் வினோத்குமார், தேவராஜ், சத்தியமூர்த்தி என்று சொன்னார்கள்.) 2வதாக நிற்கும எதிரி வீட்டின் கீழையே நின்றுகொண்டிருந்தார். (சாட்சி அடையாளம் காட்டிய எதிரியின் பெயரை கேட்டபோது அவரின் பெயரை ராமலிங்கம் என்று சொன்னார்.) 1வதாக நிற்கும் எதிரி வினோத்குமார் என் கையில் இரும்புராடால் அடித்தார். எதிரிகள் தேவராஜ், சத்தியமூர்த்தி ஆகியோா இரும்புராடால் என் மண்டையில் அடித்தார்கள். எதிரிகள் அடித்ததால் எனக்கு ரத்தகாயங்கள் ஏற்பட்டது. பின்னர் என் மனைவி நளினியை எதிரிகள் வினோத்குமார், தேவராஜ், சத்தியமூர்த்தி ஆகியோர் இரும்புராடால் மனைவியின் மண்டையில் அடித்தார்கள் அதனல் அவருக்கு ரத்தகாயங்கள் எற்பட்டது. நாங்கள் சத்தம் போட்டு கத்தியதால் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள வரதகவுண்டர், சம்பத் ஆகியோர் வந்தார்கள். அவர்கள் வருவதை பார்த்து 1வது எதிரி வினோத்குமார் என் மனைவி நளினியின் கழுத்திலிருந்த தாலியை அறுத்துக்கொண்டார். என் மனைவி அணிந்திருந்த தாலி கால் பவுனும், நாணல் 1 கிராம் அளவிலும் இருந்தது. அதன்

மதிப்பு ரூ.20,000 இருக்கும். பின்னர் எதிரிகள் வரதன் சம்பத் ஆகியோர் வருவதை பார்த்து மாடியிலிருந்து கீழே நின்ற எதிரி ராமலிங்கத்துடன் தப்பி சென்றுவிட்டார்கள். வரதன், சம்பத் ஆகியோர் என் மருமகன் ஆசைதம்பிக்கு போன் செய்து தகவல் சொன்னார். பின்னர் என் மருமகனும், மகளும் எங்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். செஞ்சி மருத்துவமனையில் இருந்தபோது செஞ்சி போலிசார் வந்து என் மனைவியிடம் வந்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். வழக்கு சம்பவம் குறித்து போலிசார் என்னையும் விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 325/2021 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 3 Ramya** |
| Father's Name | வெங்கடேசன் |
| Village | வடபுத்தூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 18 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 08/03/2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் வடபுத்தூர் கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் தற்போது திண்டிவனத்தில் எம்.கே நர்சிங் கல்லூரியில் நர்சிங் படிக்கிறேன். அ.சா.1 நளினி, அ.சா.2 வெங்கடேசன் ஆகியோர் என் பெற்றோர்கள் ஆவார்கள். 21.06.2019 தேதியன்று இரவில் நாங்கள் நிலத்தில் கட்டியுள்ள வீட்டின் மாடியில் நானும், என் அம்மா அப்பா ஆகியோர் படுத்துகொண்டிருந்தோம். அப்போது இரவு 11.30 மணிக்கு அப்போது நாங்கள் படுத்திருந்த வீடடின் மாடிக்கு 3 நபர்கள் வந்தார்கள் ஒருவர் வீட்டிற்கு கீழே நின்றுகொண்டிருந்தார். எங்கள் வீட்டிற்கு வந்தவர்களை நான் தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்கமுடியும். அவர்கள் ஆஜர் எதிரிகள் தான். ஆஜர் எதிரிகளில் 1,2 எதிரிகள் மற்றும் 4வதாக நிற்கும் நபர்கள் மொட்டை மாடிக்கு வந்தார்கள் 3வதாக நிற்கும் எதிரி வீட்டின் கீழே நின்றிருந்தார். (சாட்சி அடையாளம் காட்டிய நபர்களின் பெயரை விசாரித்தபோது 1,2 மற்றும் 4வதாக நிற்கும் நபர்களின் பெயரை கேட்டபோது அவர்களின் பெயர் முறையே வினோத்குமார், ராமலிங்கம், சத்தியமூர்த்தி என்றும் 3வதாக நிற்கும் எதிரியின் பெயர் தேவராஜ் என்றும் சொன்னார்கள்) 1தாக நிற்கும எதிரி வினோத்குமார் என் அப்பாவை இரும்புராடால் அவரின் மண்டை மீது அடித்தார். மற்ற எதிரிகள் ராமலிங்கம், சத்தியமூர்த்தி ஆகியோர் இரும்புராடால் என் அப்பாவின் கை, உடம்பு ஆகிய இடங்களில் அடித்தார்கள். அதனால் என் அப்பாவிற்கு ரத்தகாயம் ஏற்பட்டது. பின்னர் என்அம்மாவை மேற்படி வினோத்குமார், ராமலிங்கம், சத்தியமூர்த்தி ஆகியோர் இரும்புராடால் அடித்தார்கள் அதனால் என் அம்மாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. நாங்கள் கத்தியபோது எங்கள் வீட்டிற்கு பக்கத்திலிருந்த வரதன் மற்றும் சம்பத் ஆகியோர் சத்தம்கேட்டு வந்தார்கள் அவர்கள் வருவதை பார்த்து எதிரிகள் என் அம்மாவின் கழுத்திலிருந்த தாலியை

அறுத்துசென்றுவிட்டார்கள். என் அம்மா அணிந்திருந்த தாலியில் தாலி, நாணல், குழல் இருந்தது. அதன் மதிப்பு ரூ.20,000 இருக்கும். பின்னர் காயம்பட்ட என் அப்பா, அம்மாவை என் மாமா ஆசைதம்பி என்பவர் வந்து செஞுசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.